தினமணி

**செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் அறிமுகம்**

First Published : 17 Apr 2010 03:42:04 AM IST

Last Updated : 17 Apr 2010 09:15:07 AM IST

கோவை, ஏப்.16: குறைந்த நீர், விதை, உரத்தைப் பயன்படுத்தும் செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டது.

மிதவெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் பிக்சம் குஜ்ஜா இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

அவர் பேசியது: குறைந்த அளவு நீர், விதை மற்றும் உரத்தைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என்பதே இப்போதைய தேவையாக இருக்கிறது. தமிழகத்தில் அதிகளவில்
பயிரிடப்பட்டு வெற்றி அடைந்துள்ள செம்மை நெல் சாகுபடி திட்டம், இந்தியாவில் 300 மாவட்டங்களில் பின்பற்றப்படுகிறது.

அதன் வெற்றியைத் தொடர்ந்து செம் கரும்பு சாகுபடி முறை உருவாக்கப்பட்டுள்ளது. குறைந்த விதைக் கரனை, குறைந்த நீர், சரியான உர அளவு ஆகியவற்றின் மூலமாக அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடியது.

தமிழகத்தில் வரும் பருவத்தில் ஏறத்தாழ ஆயிரம் ஹெக்டேரில் செம்மை கரும்பு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

வேளாண் பல்கலை. பதிவாளர் ப.சுப்பையன்:இந்தியாவில் 41 லட்சம் ஹெக்டேர் பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது. தேசிய அளவில் சராசரி உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 70 டன்கள். இருப்பினும் இது தமிழகத்தில் 105 டன்களாக உள்ளது.

2025}ம் ஆண்டில் 3 கோடி டன்கள் சர்க்கரை தேவைப்படும். இதற்கு 45 கோடி டன் கரும்பு உற்பத்தி செய்ய வேண்டும். கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிக்க வாய்ப்பு இல்லை என்பதால், உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவது அவசியமாக இருக்கிறது. தற்போது உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதற்கு பாசன நீர் தட்டுப்பாடு முக்கியக் காரணமாக இருக்கிறது. ஆகவே, கரும்பு சாகுபடிக்கு புதிய நீர் மேலாண்மை உத்திகள் தேவைப்படுகின்றன. இதற்கு செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் ஏற்றதாக இருக்கும்.

பாசன நீர் சிக்கனத்துக்காக செம்மை நெல் சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டது. இத் தொழில்நுட்பத்தின் மூலம் நெல் மகசூல் 36 சதம் அதிகரித்துள்ளது என்றார்.

வேளாண்மை இணை இயக்குநர் சுப்புராமன், வேளாண் பல்கலை. நீர்நுட்ப மைய இயக்குநர் எஸ்.செல்லமுத்து, பேராசிரியர் பி.ஜே.பாண்டியன் ஆகியோர் பேசினர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்71.51 அடி**

First Published : 17 Apr 2010 03:36:57 AM IST

சேலம், ஏப். 16: மேட்டூர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 71.51 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2,060 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 34.01 டி.எம்.சி.

**ஏப். 23-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 17 Apr 2010 06:44:04 AM IST

தஞ்சாவூர், ஏப் 16: தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பிரதானக் கட்டட கூட்ட அறையின் முதல் மாடியில் ஏப்ரல் 23-ம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள் விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத் துறை தொடர்பான குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம், வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தி. மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி விவசாயிகள் சங்கத்தினர் வெளிநடப்பு**

First Published : 17 Apr 2010 02:23:02 AM IST

திருவண்ணாமலை, ஏப்.16: திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் குறை தீர்க் கூட்டத்திலிருந்து விவசாயிகள் சங்கத்தினர் வெளிநடப்பு செய்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சி.கதிரவன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய விவசாயி வெங்கடேசன் (தண்டராம்பட்டு), கஷ்டப்பட்டு விளைவித்த விளைபொருள்களுக்கு உரிய சந்தை வாய்ப்பில்லை. வேளாண் வணிகத் துறை மெத்தனமாக உள்ளது என்றார்.

திருவணணாமலை மாவட்டத்தில் விளையும் பொருள்களுக்கு என்ன சந்தை வாய்ப்பு உள்ளது என ஆராயப்படும். பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் கூறினார்.

விவசாயிகள் வெளிநடப்பு:

தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகி சிவக்குமார் பேசுகையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 1,900 ஏரிகளும் நீரின்றி வறண்டு விட்டன. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளும் குடிக்க நீரின்றி அவதிப்பட்டு வருகின்றன.

எனவே இம்மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் எனக் கோரி பலமுறை மனுக்கள் அளித்தோம். இதுவரை ஆட்சியர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுதொடர்பாக விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்ப வேண்டும் என்றார்.

விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற முடியாது. நீங்கள் கோரிக்கை மனு தந்தால் அரசுக்கு அனுப்பப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் சங்கத்தினர் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர். தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

விவசாயி ஆறுமுகம் (போளூர்) பேசியது, போளூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நாள்தோறும் 15,000 நெல் மூட்டைகள் வருகின்றன. ஆனால் அவற்றை கொள்முதல் செய்ய நேரடி கொள்முதல் நிலையம் இல்லை. இடைத்தரகர்கள் ஆதிக்கத்தால் நெல் விலை ரூ.950-ல் இருந்து ரூ.700 ஆக குறைந்துவிட்டது என்றார்.

மேலும் பல விவசாயிகள் குறைகளைக் கூறி நடவடிக்கை எடுக்கக் கோரினர்.

**பால், எண்ணெய் பாக்கெட்டுகளில் அளவு குறைவு**

First Published : 17 Apr 2010 04:19:12 AM IST

மதுரை, ஏப். 16: மதுரையில் தொழிலாளர் ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வில், பால், எண்ணெய் பாக்கெட்டுகளில் அளவு குறைவு கண்டறியப்பட்டுள்ளது.

இது குறித்து, மதுரை தொழிலாளர் ஆய்வாளர் என்.கோவிந்தன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மதுரை தொழிலாளர் ஆய்வாளர் தலைமையில், துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் கூட்டாக ஆய்வுகள் மேற்கொண்டனர். நுகர்வோர் நலன்கருதி, தரப்படுத்தப்பட்ட, எடையளவுகள் சட்டத்தின் கீழ் அனைத்துத் தெரு வியாபாரிகள் பயன்படுத்தும் எடையளவுகள் மறுமுத்திரையிடப்பட்டனவா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வுகளின் போது, மறுமுத்திரையில்லாமல் பயன்பாட்டில் இருந்த எடையளவுகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், பொட்டலப் பொருள்கள் விதிகளின் கீழ் பால் பாக்கெட், ஆயில் பாக்கெட் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொருள்கள் என 205 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 31 ஆய்வுகளில் விதிமீறல் கண்டறியப்பட்டது. இதையடுத்து, வழக்குகள் தொடரப்பட்டுள்ளன எனச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏப்ரல் மாதத்துக்கு கூடுதல் கோதுமை ஒதுக்கீடு: ஆட்சியர்**

First Published : 17 Apr 2010 06:41:03 AM IST

நாகப்பட்டினம், ஏப். 16: நாகை மாவட்ட பொது விநியோகத் திட்டத்துக்கு ஏப்ரல் மாத ஒதுக்கீடாக கூடுதலாக 30 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என ஆட்சியர் ச. முனியநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஏப்ரல் மாத ஒதுக்கீடாக நாகை மாவட்டத்துக்குக் கூடுதலாக 30 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், நாகை மாவட்டத்துக்கு ஏப்ரல் மாத ஒதுக்கீடாக 250 டன் கோதுமை பெறப்பட்டுள்ளது.

இந்தக் கூடுதல் ஒதுக்கீடு கோதுமை அனைத்து வட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரக்கன்றுகள் வழங்கும் விழா**

First Published : 17 Apr 2010 12:57:33 AM IST

பெரியகுளம். ஏப் 16: பெரியகுளம் அருகே உள்ள சருத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், நேசம் தொண்டு நிறுவனம் மற்றும் மகாகவி தொண்டு நிறுவனம்
சார்பில், மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நேசம் தொண்டு நிறுவன இயக்குநர் பி.முருகன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மகாகவி தொண்டு நிறுவன இயக்குநர் அக்கினிவீரா வரவேற்றார். தொண்டு நிறுவன நிர்வாகி உமாமகேஸ்வரி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

மாவட்ட உரத்த சிந்தனை எழுத்தாளர் சங்கச் செயலாளர் கவிஞர் கவிக்கருப்பையா சிறப்புரையாற்றினார்.

புவி வெப்பமயமாதலைத் தடுப்பது குறித்தும், மரக்கன்றுகள் நடுவதன் அவசியம் குறித்தும், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்தும் விழாவில் வலியுறுத்தப்பட்டது.

சுய உதவிக்குழுவினருக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மகா அண்ணா மகளிர் குழு பொறுப்பாளர் சத்யா நன்றி கூறினார்.

**வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 17 Apr 2010 12:03:00 AM IST

உளுந்தூர்பேட்டை, ஏப். 16: வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை நீர்வள, நிலவளத் திட்டத்தின் சார்பில் தொழில் நுட்ப பயிற்சி உளுந்தூர்பேட்டையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷பயிற்சிக்கு வேளாண் வணிக துணை இயக்குநர் என்.தனவேல் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் (வணிகம்) நா.செந்தில் வரவேற்றார். விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் என்.செல்வராஜ், வேளாண்மை அறிவியல் நிலைய முனைவர் பா.இந்திராகாந்தி, திருநாவலூர் உதவி இயக்குநர் கி.ரவீந்திரன், வேளாண்மை அலுவலர் இரா.பெரியசாமி, தோட்டக் கலைத் துறை வேளாண்மை உதவி அலுவலர் ஆர்.முருகன், வேளாண்மை பொறியியல் துறை இளநிலை பொறியாளர் பாண்டியன், மீன்வள உதவி இயக்குநர் இரா.இளம்பிரிதி ஆகியோர் தொழில் நுட்ப சிறப்புரையாற்றினர். தோட்டக் கலைத் துறை உதவி அலுவலர்கள் எம்.நடராஜன், மணி, கோவிந்தராஜ், சரவணன் மற்றும் விவசாயிகள் பெருந்திரளாக கலந்துகொண்டு பயன்பெற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் எம்.சரவணன் நன்றி கூறினார்.

தினமலர்

**'குழுமூர் பகுதியில் நெல் கொள்முதல் நிலைய கட்டடம் வேண்டும்'**

அரியலூர் : குழுமூர் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் கட்டடம் கட்ட கலெக்டரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.செந்துறை அருகில் உள்ள குழுமூர் கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் செல்வம் அரியலூர் கலெக்டர் ஆபிரகாமிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது, செந்துறை ஒன்றியத்தை சேர்ந்த நக்கம்பாடி முதல் வெள்ளூர் வரையிலான சாலை பல ஆண்டுகளாக மோசமடைந்து நடந்து செல்ல முடியாத அளவில் உள்ளது.

இதனால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை மாவட்ட விற்பனை கூடத்திற்கு வாகனங்களிலோ மாட்டு வண்டியிலோ எடுத்து செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அந்த சாலையை புதுப்பித்து தார்ச்சாலையாக அமைத்து தர வேண்டும். மேலும் குழுமூரில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பொதுப்பணித்துறை மூலம் விவசாயிகள் நெல் சாகுபடி செய்து வருகின்றனர். அதனை ஒட்டியுள்ள வங்காரம், கிளியப்பட்டு, ஒத்துடையார் கிராமங்களிலும் அதிகளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதிகளுக்கு குழுமூர் மையப் பகுதியாக உள்ளதால் அங்கு நெல் கொள்முதல் நிலையம் கட்டடம் கட்டித்தர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**அதிக விலைக்கு உரம் விற்பனை: விவசாயிகள் குற்றச்சாட்டு**

கடலூர் : நிர்ணயம் செய்த விலையை விட காம்பளக்ஸ் உரம் அதிக விலைக்கு விற்கப்படுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டினர். விவசாயிகள் குறைகேட்பு கூட் டம் கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடத்தில் நடந் தது. கலெக்டர் சீத்தாராமன் தலைமை தாங்கினார். டி.ஆர்.ஓ., நடராஜன், கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மணி, வேளாண்மைத் துறை இணை இயக்குனர் இளங்கோவன், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ராஜகோபால் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கடலூர் ஒன்றிய விவசாயிகள் சங்க செயலாளர் தட்சணாமூர்த்தி பேசுகையில் 'கடலூரிலிருந்து திருவந்திபுரம், பாலூர், நடுவீரப்பட்டு, பத்திரக்கோட்டை, சிலம்பிநாதன் பேட்டை வழியாக புதுப்பாளையம் செல்லும் அரசு பஸ்சால் 20 கிராம மக்கள் பயனடைகின்றனர். பல ஆண்டுகளாக இயக்கப்படும் இந்த பஸ் பழுதடைந்துள்ளது. இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது. இங்கு புது பஸ் விட வேண்டும். இல்லையென்றால் போராட்டம் நடத்தப்படும் என்றார். உடன் 'போக்குவரத்து கழக அதிகாரி உடனடியாக பஸ் சரி செய்யப்படும்' என்றார். கார்மாங்குடி வெங்கடேசன் பேசுகையில் 'பெண்ணாடத்தில் ரயில்வே மேம்பாலம் கட்டப்படுகிறது. இதற்காக மாற்று பாதை அமைத்து தர வேண்டும். மழை காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்த கம்மாபுரம், விருத்தாசலம் விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வில்லை' என்றார்.

மணம் தவிழ்ந்தபுத்தூர் நரசிம்மன் 'பண்ருட்டியில் 'காம் பளக்ஸ்' உரம் நிர்ணயிக்கப்பட்ட 330 ரூபாய்க்கு பதில் 100 ரூபாய் அதிகமாக வைத்து விற்பனை செய்யப்படுகிறது என்றார். விவசாயி முத்துக்குமரன் 'சிறுகரபம்பலூர் பெருமாள் குட் டையை அகலப்படுத்தும் பணிக் காக ஆய்வு செய்த அதிகாரிகள் 6.71 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீடு அளித்தனர். ஆனால் இதுவரை பெருமாள் குட்டையை அகலப்படுத்தவில்லை. நாளுக்கு நாள் திட்ட மதிப்பீடுதான் அதிகரித்து வருகிறது என்றார். உடன் டி.ஆர்.ஓ., 'அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது' என்றார். பாசிமுத்தான் ஓடை விவசாய சங்க தலைவர் ரவீந்திரன் 'பருவம் தவறி மழை பெய்ததால் உளுந்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து 35 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட உளுந்து பயிர் தற்போது 70 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே பயிர் செய்யப்பட் டுள்ளது. எனவே உளுந்து சாகுபடியை அரசு ஊக்குவிக்க வேண் டும். ஒழுங்குமுறை விற்பனை கூடம் சிறப்பாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

விவசாய சங்க கூட்டமைப்பு தலைவர் ரவிச்சந்திரன் 'தொடர் மின் வெட்டு காரணமாக விவசாயம் பாதிக்கப்படுகிறது. மும் முனை மின்சாரம் வழங்கப்படும் நேரத்தை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும் கடலூர் மாவட்டத்திற்கு சிறப்பு அனுமதி பெற்று விவசாயத்திற்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும்' என்றார். விவசாயிகள் குறைகேட்பு கூட் டம் முடிந்த பின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் முன்பு மின் வெட்டை கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**65 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி : வேளாண் துறை இணை இயக்குனர் தகவல்**

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை விவசாயத்தை பெருக்க விவசாயிகருக்கு 65 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி வழங்கப்படுகிறது' என்று வேளாண் துறை இனை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 14 ஆயிரத்து 692 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மரம் ஒன்றுக்கு 80 முதல் 100 காய்கள் வரை மகசூலாக பெறப்படுகிறது. ஈரியோஃபைட் நோய் தாக்குதல் மற்றும் வறட்சி காரணமாக மகசூல் குறைந்து வருகிறது. பல இடங்களில் வறட்சி காரணமாக மரங்கள் வெட்டப்படுகின்றன. தென்னையில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தி பெருகி வரும் சாகுபடி செலவினை ஈடு செய்து, விவசாயிகளின் வருவாயை பெருக்கிட தென்னை மரங்களை நல்ல முறையில் பராமரித்து மகசூலை பெருக்க வேண்டும். கோடை பருவத்தில் இடை உழவு செய்து, நீர் தேவைக்கு போட்டியாக உள்ள களைகளை அகற்றுவது மிகவும் அவசியமாகும். கோடை மழை பெய்தவுடன் தோப்புகளில் சனப்பு மற்றும் தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடி செய்து 45 நாட்களுக்குள் மடக்கி உழவு செய்ய வேண்டும். மழை பருவம் தொடங்கியவுடன் மரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழு உரம் இடவேண்டும். செம்பான் சிலந்தி தாக்கப்பட்டுள்ள மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு 5 கிலோ தரமான வேப்பம் புண்ணாக்கு இட்டு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்தவன் மூலம் நோய் தாக்குதலை குறைக்கலாம். ரசாயன உரங்களான யூரியா 15 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ மற்றும் மூரியேட் ஆப் பொட்டாஷ் 2 கிலோவையும்இரண்டாக பிரித்து ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்தில் ஒரு முறையும், நவம்பர்-டிசம்பர் மாதத்தில்

மறுமுறையும் மரம் ஒன்றுக்கு இடவேண்டும். தென்னை நுண்ணூட்ட கலைவையினை மரம் ஒன்றுக்கு 1 கிலோ வீதம் இடவேண்டும். இந்த உழவியல் முறைகளை ஆண்டுதோறும் கடைபிடித்தால் மரம் ஒன்றுக்கு சராசரியாக 100 முதல் 120 காய்களை பெறலாம். கோடை காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை போக்க நீர் மேலாண்மை அவசியமாகும். தற்சமயம் நிலவி வரும் கோடை பருவத்தில் பாசன மேலாண்ணை செய்வது மிகவும் அவசியமாகும்.
தோப்புகளுக்கு ஈரப்பதத்தை பாதுகாத்திட கரும்பு சோகை பரப்புதல், தேங்காய் உரி மட்டைகளை தென்னை மரத்தினை சுற்றி புதைத்தல் ஆகிய நுணுக்கங்களை கையாளலாம். கோடை காலத்தில் நீர் வீணாகமால் தவிர்பதற்காக சொட்டு நீர் பாசனம் மிக உகந்தாகும். இந்த முறையில் நீர் சிக்கனப்படுத்தப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு தற்போது தோட்டக்கலை மினி மிசன் மூலமாக 65 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம் செய்து தரப்படுகிறது. மேலும் விபரங்கள் அறிய அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மண்புழு உரம் தயாரித்தல் செயல்விளக்கம்**

பெரம்பலூர் : பெரம்பலூர் வட்டார வேளாண்துறை மூலம் நீர்வள-நிலவளத்திட்டத்தின் கீழ் பாளையத்தில் மண்புழு உரம் தயாரித்தல் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.பாளையத்தில் இந்திரா, அந்தோணியம்மாள் ஆகியோர் வயலில் செயல்விளக்க நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு வட்டார வேளாண் உதவி இயக்குநர் செந்தமிழ்செல்வன் தலைமை வகித்தார். இதில் 12 அடி நீளம் 4 அடி அகலம் 2.5 அடி ஆழம் உள்ள குழி அமைக்கப்பட்டு அதில் பாலிதீன் ஷீட்டில் அரை மக்கிய பண்ணைக்கழிவுகள் நிரப்பப்பட்டன. இருநாட்களுக்கு சாணக்கரைசல் தெளித்து வெப்பம் தணிந்த நிலையில் 10 கி.கி. மண்புழு விடப்பட்டது.

35-40 நாட்களுக்குள் எருவை மண்புழுக்கள் சாப்பிட்டு மண்புழு உரக்கழிவைகளை தரும். அதனை சலித்து எடுத்து சேமித்து வயலுக்கு உரமாக பயன்படுத்தலாம். இதன் மூலம் மண்வளம் காக்கப்படுகிறது. நீர்பிடிப்புத்தன்மை, வேர்வளர்ச்சி ஆகியவை அதிகரிக்கிறது. ரசாயன உரச்செலவு மிச்சமாகிறது. களைக்கட்டுப்பாடு, இயற்கைமுறையில் தயாரிக்கும் உரத்தினால் மகசூல் அதிகரித்து அதிக லாபம் பெறலாம் என செயல்விளக்கத்தின் போது துணை வேளாண் அலுவலர் மணிவேல் கூறினார். நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**புதுகை வேளாண் வட்டத்தில் நுண்ணீர் பாசனம் அறிமுகம்**

துக்கோட்டை : புதுகை வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் பயறுவகை பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க நுண்ணீர் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வேளாண்மை உதவி இயக்குனர் ஷாஜகான் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு : பயறுவகைப் பயிர்களின் விலை ஏற்றத்தால் பயறுவகை உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்கு அடிப்படையாக பயறுவகை பயிர்களின் பரப்பளவை அதிகப்படுத்துவதற்கான பயறு முனைப்பு இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் குறைந்த செலவில் அதிக மகசூல் தரும் பயறுவகைகளை அதிக அளவில் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு எடுத்துகூறப்பட்டுள்ளது. மேலும் தற்போது உள்ள சூழ்நிலையில் நீர்சிக்கனத்திற்காக நுண்ணீர்பாசனமுறையில் பயறுவகை சாகுபடி செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக ராஜகுளத்தூர் கிராமத்தில் செங்கோலம்மாள் வயலில் ஒரு எக்டர் பரப்பளவில் துவரை பயிர்சாகுபடி செய்யப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீர் சிக்கனமாக பயன்படுத்தப்படுகிறது. தற்போது துவரைபயிர் பசுமையாகவும், துரித வளர்ச்சியும் அடைந்து செடிகள் வாழிப்பாக உள்ளன. இந்த

செயல்விளக்கத்தை விவசாயிகள் அனைவரும் நேரில் கண்டு பயன்அடையலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்

**பனை வெல்ல உற்பத்திக்கு மானியம்! அரசுக்கு தொழிலாளர் சங்கம் கோரிக்கை**

புதுக்கோட்டை : பனை வெல்ல உற்பத்திக்கு மானியம் அளிக்க வேண்டும் என்று நவ இந்திய தொழிலாளர் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து நவ இந்திய தொழிலாளர் சங்க மாநில தலைவர் நாகலிங்கம் புதுகையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: மண், மரபு சார்ந்த சூழலுக்கு ஏற்ப சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு விவசாய தொழிலார்களை பாதுகாப்பதே சங்கத்தின் நோக்கமாகும். தமிழகத்தில் பனை தொழிலாளர்களை ஒருங்கிணைத்து பனை பொருட்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இச்சங்கத்தின் வாயிலாக விரைவில் பனை தொழிலுக்கு என்று டிப்ளமோ பயிற்சி கல்லூரி தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது மத்திய மாநில அரசுகள் கிராம பாரம்பரிய தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பன்னாட்டு தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்த ஆண்டான 1947ம் ஆண்டில் 60 சதவீதமாக இருந்த விவசாய நிலப்பரப்பு தற்போது 30 சதவீதமாக குறைந்து விட்டது. சர்க்கரை உற்பத்தியை போன்று பனை வெல்ல உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அரசு மானியம் அளிக்க வேண்டும்.

பனை பொருட்களில் இருந்து 800 விதமான பொருட்கள் உற்பத்தி செய்யலாம். பனை மரம் ஏறினாலே கள் இறக்கத்தான் ஏறுகிறார்கள் என்ற எண்ணத்தில் அரசு செயல்பட்டு வருவது கண்டிக்கத்தக்கது. இந்தியாவில் 8.5 கோடி பனை மரம் உள்ளன. இதில் 5 கோடி பனைமரம் தமிழகத்தில் உள்ளது. மத்திய அரசை போன்று பனைதொழிலுக்கு என்று தனி வாரியம் தமிழகத்தில் அமைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது கட்சி சார்பற்ற விவசாயிகள் மேம்பாட்டு சங்க புதுகை மாவட்டத்தலைவர் சிவசாமி, செயலாளர் அப்பாவு பாலாண்டார், நிர்வாகிகள் செங்கோல் உடையார், மணிவேல், ராமதீர்த்தர் உட்பட பலர் இருந்தனர்.

**விவசாயிகள் கூட்டத்தில் அறிவிப்பு : வயதுக்கு ஏற்ப தென்னை காப்பீடு திட்டம்**

சேலம்: "தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தென்னை மரங்களுக்கு, அதன் வயதுக்கு ஏற்ப காப்பீடு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது," என, வேளாண் காப்பீடு திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன் தெரிவித்தார். சேலம் பழைய நாட்டாண்மை கழக கூட்ட அரங்கில் நடந்த விவசாயிகள் குறை தீர் கூட்டத்துக்கு டி.ஆர்.ஓ., கலையரசி தலைமை வகித்தார். வறட்சியின் காரணமாகவும், விலையேற்றத்தின் காரணமாக கறவை மாடுகளுக்கு தீவனச்செலவு அதிகமாவதால், இடைக்கால நிவாரணமாக பால் விலையை உயர்த்தி வழங்க வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு ரசீது வழங்க வேண்டும். சேலம் மாநகராட்சி பகுதியில் காய்கறிகள் விற்பனை செய்வதற்கு தனியாக மார்க்கெட் அமைக்க இடம் ஒதுக்கி கொடுக்க வேண்டும். விவசாய நிலங்களுக்கு பட்டாக்கள் வழங்க விண்ணப்பிக்கின்றவர்களுக்கு விரைவாக வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கையை குறை தீர் கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்தனர். தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன் பேசும் போது, "தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தென்னை மரங்களுக்கு, அதன் வயதுக்கு ஏற்ப காப்பீடு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது," என்றார். டி.ஆர்.ஓ., கலையரசி பேசும் போது, "கடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நிலுவை, பெறப்பட்ட 99 மனுக்களில் 93 மனுக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, பதில் அனுப்பப்பட்டுள்ளது. ஆறு மனுக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முறையான ஆவணங்களுடன் விண்ணப்பித்தால், சரிபார்த்து விவசாய நிலங்களுக்கு பட்டா மாறுதல் உடனடியாக வழங்க வேண்டும்," என்றார்.

---

**பயறு விதைக்க ஆலோசனை**

தேனி : தேனி மாவட்டம், முழுவதும் நெல் அறுவடை நடந்து வருகிறது. அறுவடை முடிந்த தரிசு நிலத்தில் பயறு வகைகளை விதைக்க ஆலோசனை கூறியுள்ள விவசாயத்துறை தேவையான பயறு வகை விதைகளை இருப்பு வைத்துள்ளது. பாசிப்பயறு, கானம், தட்டப்பயறு, உளுந்து, துவரை போன்ற விதைகள் கிலோவிற்கு 20 ரூபாய் மானியத்தில் வழங்கப்படுகின்றன. தேவைப்படும் விவசாயிகள் விவசாய விரிவாக்க மையத்தினை அணுகி தேவையான பயறு வகை விதைகளை பெற்றுக் கொள்ளலாம்

**உற்பத்தியாளர்கள் குழுவிடமிருந்து நெல் நேரடி கொள்முதல்**

தூத்துக்குடி : வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் அமைக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் குழுவிடமிருந்து நெல் நேரடி கொள்முதல் செய்யப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் கிராமங்கள் தோறும் விவசாயிகளை ஒன்று சேர்த்து விளைபொருள் உற்பத்தியாளர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் மூலம் நேரடி மொத்த கொள்முதல், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அதிக விலை கிடைக்க வழி செய்கின்றது.

தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு கொள்முதல் விலை, வியாபாரிகள் கொள்முதல் விலையை விட நெல் கோட்டை ஒன்றுக்கு ரூ.280/- அதிகமாயிருக்கின்றது. கலெக்டர் உத்தரவின்படி அரசு நேரடி கொள்முதல் செய்யும் 5 இடங்களை தவிர 300 மூடைகளுக்கு அதிகமாக உள்ள இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் நேரில் சென்று கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருச்செந்தூர் வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் மணிகண்டன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் திருப்பதி நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகளை நேரில் சந்தித்து கேட்டுக் கொண்டதின் பேரில் திருச்செந்தூர் வட்டாரம் காணம் கிராம நெல் விளைபொருள் உற்பத்தியாளர்கள் குழு மூலம் உற்பத்தி செய்த 718 மூடை நெல்லை அறுவடை பின் செய் நேர்த்தி தொழில் நுட்பங்களை கடைபிடித்து 17 சதவீத நெல் ஈரப்பதத்துடன் நேரடி கொள்முதல் மூலம் காணம் கிராமத்தில் வைத்து கொள்முதல் செய்ததினால் உள்ளூர் விலையை விட ரூ.200/- வீதம் குவிண்டாலுக்கு கூடுதல் லாபமாக 1 லட்சத்து 560 ரூபாய் குழுவிவசாயிகளுக்கு லாபம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனால் விவசாயிகள் விளைபொருள் உற்பத்தியாளர்கள் குழுக்களாக இணைந்து இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வேளாண் வணிக வேளாண்மை அலுவலர்கள் மூலம் மொத்த கொள்முதலீட்டாளர்கள்/நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்து கூடுதல் லாபம் பெறலாம். இவ்வாறு தூத்துக்குடி வேளாண் வணிகத்துறை இயக்குநர் முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

**வள்ளியூரில் நெல்விதைகள் விற்பனை**

திருநெல்வேலி:வள்ளியூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் நெல் விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.வள்ளியூர் வட்டாரம் வள்ளியூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தரமான சான்று பெற்ற அம்பை.16 நெல் விதைகள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே அம்பை.16 நெல் விதைகள் தேவைப்படும் விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வாங்கி பயனடையுமாறு வள்ளியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மார்சலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தீவிர பருத்தி பெருக்கதிட்ட செயல்விளக்க ஆய்வு**

தென்காசி:சிவகிரியில் தீவிர பருத்தி பெருக்க பருத்தி செயல் விளக்க திடல் வயலாய்வு நடந்தது.வாசுதேவநல்லூர் வட்டாரம் சிவகிரியில் தேவிப்பட்டணம் சாலையில் திருப்பதிராஜன் வயலில் தீவிர பருத்தி பெருக்க திட்ட பருத்தி முன்னோடி செயல்விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது. இத்திடலை நெல்லை இணை இயக்குநர் சுப்பிரமணியன், மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் துரைப்பாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.தீவிர பருத்தி பெருக்க திட்டத்தின் கீழ் பருத்தி எம்.சி.யு-5 (வி.டி) விதை, உரம், பூச்சி, பூஞ்சான மருந்துகள், விதை நேர்த்தி மருந்துகள், வேப்பம் புண்ணாக்கு உள்ளிட்ட இடுபொருட்கள் அரசு மானியத்தில் வழங்கப்பட்டு ஒரு ஹெக்டேர் அளவுக்கு முன்னோடி செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டிருந்தது.

இத்திடலில் வரிசை விதைப்பு செய்யப்பட்டிருந்ததையும், ஓர பயிர் மற்றும் ஊடு பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்ததையும் பற்றிய விளக்கத்தை இணை இயக்குநர் சம்பந்தப்பட்ட விவசாயியிடம் கேட்டார். அதற்கு அந்த விவசாயி இதுபோல் செய்வதால் நன்மை தரும் பூச்சிகளின் பெருக்கம் அதிகமாக இருக்கும். வேளாண்துறை அலுவலர்களது அறிவுரைப்படி தட்டை பயறு, மக்காச்சோளம் உள்ளிட்ட பொறி பயர்கள் விதைத்திருப்பதாக கூறினார்.துணை இயக்குநர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் ஆகியோர் பருத்தியில் அசுவினி மற்றும் தத்து பூச்சிகளின் தாக்குதல் தென்படுவதால் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

பூச்சி தாக்குதல்களை கணகாணிக்க ஏதுவாக மஞ்சள் ஓட்டு பொறி மற்றும் விளக்கு பொறிகள் அமைக்க வேண்டும் என இணை இயக்குநர் சுப்பிரமணியன் கூறினார். பூஞ்சான நோய்கள் தாக்காமல் இருக்க எலி ஒழிப்புக்கு ஏதுவாக ஆந்தை பந்தங்கள் அமைக்க வேண்டும் என துணை இயக்குநர் துரைப்பாண்டியன் கூறினார்.இணை, துணை இயக்குநர்களின் ஆய்வின் போது வேளாண்மை அலுவலர் ராமசாமி, துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் உடனிருந்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, சம்சுதீன், அண்ணாதுரை செய்திருந்தனர்.

**தி.மலையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் வெளிநடப்பு**

திருவண்ணாமலை:தி.மலையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி, மாவட்ட குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் வெளிநடப்பு செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.திருவண்ணாமலையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு, டி.ஆர்.ஓ., கதிரவன் தலைமை வகித்தார். பல துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:ஆர்த்தீஸ்வரி ராஜேந்திரன் (விவசாயி): தி.மலையில் மூடப்பட்ட அருணாசலா சர்க்கலை ஆலை நிர்வாகம் மூலம் 3 ஆயிரம் விவசாயிகளுக்கு 5 கோடி ரூபாய்க்கும் அதிகமாக கரும்பு பாக்கித் தொகை வரவேண்டி உள் ளது. மாவட்ட நிர்வாகம் இதற்கு தீர்வு ஏற்படுத்த வேண்டும்.

தானிப்பாடி வெங்கடேசன் (விவசாயி): தானிப்பாடி பகுதியில் ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் ஒரு வகையான எண்ணை வகை செடி பயிரிடப்பட்டுள்ளது. இதனை விற்பனை செய்வது குறித்து வேளாண் விற்பனை பிரிவு மூலம் விவசாயிகளுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. அதேபோல், 2 ஆயிரம் ஏக்கரில் மரவள்ளிகிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. இவைகளை அரசே கொள்முதல் செய்ய வேளாண் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தி.மலையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

டி.ஆர்.ஓ.,: எண்ணை வகை பயிர் விற்பனை வாய்ப்புகள் குறித்து விசாரித்து உரிய தகவல் தெரிவிக்கப்படும்.

சிவகுமார் (விவசாயி): மாவட்டத்தில் அனைத்து ஏரிகளும் வறண்டு போய் விட்டன. கால்நடை வளர் ப்பும் மேய்ச்சலுக்கு வழியின்றி பாதிக்கப் பட் டுள்ளது. குடிநீர் மட்டுமின்றி, விவசாயமும் பாதிக் கப்பட்டுள்ளது. எனவே, தி.மலையை வறட்சி மா வட்டமாக அரசு அறிவிக்க கோரி, இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.டி.ஆர்.ஓ.,: இது, உள் ளாட்சி அமைப்பு கூட்டம் கிடையாது. எனவே, தீர்மானம் எதுவும் நிறைவேற்ற முடியாது. உங்கள் கருத்துகளை அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். மேலும், வறட்சி மாவட்டம் என்று அறிவிக்க பல விதிமுறைகள் உள்ளன.(இதையடுத்து, கூட்டத்தில் கலந்துகொண்ட சில விவசாயிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷமிட்டபடியே வெளிநடப்பு செய்தனர்)தம்புஆறுமுகம் (விவசாயி): போளூர் வேளாண் விற்பனை கூடத்துக்கு ஒரு நாளைக்கு 15 ஆயிரம் நெல் மூட்டைகள் வருகின்றன. ஆனால், அவைகளை உட னே எடை போடுவதில்லை. 10 நாள் காத்திருக்க வேண்டி உள்ளது. மேலும், வியாபாரிகள் தங்களுக்குள் கூட்டணி வைத்துக்கொண்டு குறைந்த விலைக்குதான் நெல் கொள்முதல் செய்கின்றனர்.(அப்போது, சில விவசாயிகள் எழுந்து ஒரேநேரத்தில் தங்களது கோரிக்கைகளை கூற ஆரம்பித்தனர். இதனால் யார் என்ன சொல்கிறார்கள் என்று புரியவே இல்லை)

டி.ஆர்.ஓ.: கூட்டத்தில் பேச வேண்டும் என்பதற்காக ஒரேநேரத்தில், ஒரே கோரிக்கையை திரும்ப, திரும்ப இஷ்டம் போல் பேசக்கூடாது. இப்படி ஆங்காங்கே எழுந்து ஒரேநேரத்தில் பேச ஆரம்பித்தால், கூட்டம் நடத்துவதில் அர்த் தமே கிடையாது. உங்களது கோரிக்கைகளை கேட்டு அதற்கு உரிய தீர்வு ஏற்படுத்தவே இந்த கூட்டம் நடத்தப்படுகிறது. ஆளுக்கு ஆள் இஷ்டம் போல் வெறுமனே பேச வேண்டும் என்றால், எனது அலுவலகத்தில் உட்கார்ந்து பேசி விட்டு போகலாம்.

ஆனைவாடி வெங்கடேசன் (விவசாயி): போளூர் தாலுகா அலுவலகத்தில் 'தொடுதிரை' கம்ப்யூட்டர் இல்லாததால் பாதிப்பு ஏற்படுகிறது.

சுப்ரமணி (விவசாயி): தி.மலை மாவட்டத்தில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டும்.சிவகுமார் (விவசாயி): கிராமங்களில் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டத்தை முதல் வர் கருணாநிதி தொடங்கி வைத்து மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளார். அதேபோல், பட்ஜெட்டிலும் ஒரு டன் கரும்புக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(குறைகளை கூறாமல் இவ்வாறு அவர் பேசியதற்கு சில விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதற்கு சிவகுமார், 'இப்படித்தான் பேசுவேன்' என்று பதிலுக்கு சத்தம் போட்டார்)

டி.ஆர்.ஓ.,: இந்த விஷயங்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள விஷயம். இந்த கூட்டம் விவசாயிகளின் குறைகளை தெரிவிக் கும் கூட்டம். அது குறித்து மட்டுமே பேச வேண்டும். மற்ற விஷயங்களை பேசுவதாக இருந்தால், இந்த கூட்டம் நடத்த வேண்டிய அவசியமே கிடையாது.இவ்வாறு விவாதம் நடந்தது.

'மக்கர்' மைக்:கூட்டத்தில் டி.ஆர்.ஓ., மட்டுமின்றி விவசாயிகள் பேசும்போதும், 'மைக்' மக்கர் செய்தது. ஒரே இரைச்சலாகவும், பேசுவது தெளிவு இன்றியும் இருந்ததால் பலரையும் முகம் சுளிக்க செய்தது. அதேபோல், கூட்டத்தில் பேசிய விவசாயிகள், அரசியல் கூட்டம் போன்று, 'அவர்களே...இவர்களே' என்று நீட்டி முழக்கி பேச ஆரம்பித்தனர். இதனால் அவர்களிடம், குறைகளை மட்டுமே பேசுங்கள் என்று டி.ஆர்.ஓ., வேண்டுகோள் விடுத்தார்.

**மின்சார தட்டுப்பாட்டைக் கண்டித்து சாகுபடியை குறைக்க விவசாயிகள் முடிவு**

---

விழுப்புரம் : விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கினார். டி.ஆர்.ஓ., வெங்கடாஜலம், வேளாண் துறை இணை இயக்குனர் ராமலிங்கம், கூட்டுறவு சங்களின் மண்டல இணை பதிவாளர் மலர்விழி, துணை ஆட்சியர் (பயிற்சி) சுப்புலட்சுமி, மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ரேணுகாம்பாள் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பேசுகையில், முகையூர் ஒன்றியத்தில் பல இடங்களில் கால்நடைகள் மர்ம நோயால் இறக்கின் றன. பல முறை கூறியும் மருத்துவ முகாம் நடத்தவில்லை. அரகண்டநல்லூர் மார்க்கெட் கமிட்டியில் நெல் வைக்க இடமில்லை என கூறி திருப்பி அனுப்பி விட்டு வியாபாரிகளின் நெல்லை உள்ளே வைக்க அனுமதிக்கின்றனர். விவசாயிகளுக்கு தர வேண்டிய சலுகைகளை வியாபாரிகளுக்கு தருகின்றனர். தென்பெண்ணை ஆற்றில் அதிகளவு மணல் எடுப்பதால் வருங்காலங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். விவசாயிகள் குறைகேட்பு கூட்டங்களில் தரும் மனுக்கள் மீது எடுத்த நடவடிக்கை குறித்த நகல் விசாயிகளுக்கு வழங்க வேண்டும். கோலியனூர் வாய்க்கால் தூர் வார வேண்டும். பானாம்பட்டு சாலையை சீரமைக்க வேண்டும். நெல் விலையை அதிகரிக்க வேண் டும். ஏ.குமாரமங்கலம் அருகில் இருக் கும் கணையார் கிராமத்தில் உள்ள துவக்க பள்ளியில் மாணவர்கள் உட்கார பாய் உள்ளது. இவை கிழிந்துள் ளதால் பலகை செய்து வைக்க வேண்டும் உள்ளிட்ட பல் வேறு பிரச்னைகள் குறித்து புகார் தெரிவித்து பேசினர்.

மாவட்ட விவசாயிகள் கூட்டமைப்பு நிர்வாகி ரங்கராஜூ பேசுகையில், மும்முனை மின்சாரம் பகலில் 6 மணி நேரமும், இரவில் 3 மணி நேரம் மட்டுமே வழங்கப்படுகிறது. இதற்கு கண்டனம் தெரிவித்து வரும் ஜூலை மாதம் வரை சங்க பிரதிநிதிகள் விவசாய சாகுபடியை 20 சதவீதம் குறைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளோம் என்றார். கூட்டத்தில் டி.ஆர்.ஓ.,வெங்கடாஜலம் பேசுகையில், விவசாயிகள் கொடுக்கும் மனுக்கள் மீது எடுத்த நடவடிக்கை குறித்து சங்க பிரதிநிதிகளுக்கு நகல் அனுப்பப்படும். விவசாயிகள் அடையாள அட்டை வழங்கும் பணி நடந்து வருகிறது. மீதமுள்ளவர்களுக்கு விரைவில் வழங்கப்படும் என்றார். கலெக்டர் பழனிசாமி பேசுகையில், விழுப்புரம் நகரில் நான்கு முனை சந்திப்பு அல்லது ஏதாவது ஒரு இடத்தில் சுரங்கப்பாதை அமைக்கப்படும். மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைக்க நிதியுதவி பெற்ற விவசாயிகள் விரைவாக தொட்டி கட்ட வேண்டும் என்றார்.

**பொங்கலூரில் குறைந்து வரும் பருத்தி சாகுபடி**

பொங்கலூர் : புழு தாக்குதல், விதை, உர விலையேற்றம், கச்சா பருத்திக்கு உரிய விலை கிடைக்காமை போன்ற காரணங்களால், பொங்கலூர் பகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்து வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன், பருத்தியை பெரிய அளவில் விவசாயிகள் சாகுபடி செய்தனர். தற்போது, பருத்தி சாகுபடி செய்வதை தவிர்த்து விட்டு, பெரும்பாலானோர் மாற் றுப்பயிருக்கு மாறி விட்டனர். பொங்கலூர் பகுதியில் காணப்படும் கரிசல் மண் பருத்தி விளைச்சலுக்கு ஏற்றதாக உள்ளது. பருத்தி வறட்சியை தாங்கி வளரும் இயல்புடையதால், மானாவாரி நிலங்களிலும், தண்ணீர் வசதியுள்ள பகுதிகளிலும் ஏராளமான விவசாயிகள் பருத்தியை சாகுபடி செய்து வந்தனர்.விதையை, ஒவ்வொரு விவசாயியும் தங்களது நிலங்களில் இருந்தே சேகரித்து, அடுத்த போகத்துக்கு பயன்படுத்தி வந்தனர். பல ஆண்டுகளாக பயிரிடும் பாரம்பரிய பருத்தியை பூச்சிநோய் தாக்கும் வாய்ப்பு குறைவாக இருந்தது. பாரம்பரிய நாட்டு ரகங்கள் இங்குள்ள சூழ்நிலைக்கேற்ப பழகிப் போனதால், நோய் எதிர்ப்புத்திறன் அதிகம் இருந்தது.விதையை விவசாயிகளே ஆடு, மாடுகளின் சாணத்துடன் கலந்து விதை நேர்த்தி செய்தனர். இதனால், விதைகளின் முளைப்புத்திறன் அதிகரித்தது. விவசாயிகள் இயற்கை உரங்களையே பயன்படுத்தினர். விதை, மருந்து, உரம் போன்றவற்றுக்கு ஏற்படும் செலவு இல்லை என்ற நிலையே காணப்பட்டது. பெரும்பாலான மக்கள்

வேளாண்மையையே நம்பி இருந்ததால், ஆட்கள் பற்றாக்குறை என்பது இல்லாமல் இருந்தது. இதனால், பருத்தி விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தது.

தற்போது எல்லாம் நவீன மயமாகி விட்டதால், உயர் விளைச்சல் தரக்கூடிய வீரிய ரகங்களை பயிர் செய்கின்றனர். விதைகளை மிக அதிக விலை கொடுத்து, பன்னாட்டு கம்பெனிகளிடமே வாங்குகின்றனர். இந்த ரகங்கள் முற்றிலும் புதிய சூழ்நிலையில் வளர்வதால், இங்கு நிலவும் சீதோஷ்ண நிலை மாறுபாட்டால், எளிதில் நோய் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. புதிய ரகங்கள் குறைந்த நாட்களில் விளையும் தன்மை உடையதால், நோய் தாக்கினால், அதிலிருந்து மீண்டு வர முடியாமல் போய்விடுகிறது.செடி முளைத்ததும் 'திம்மெட்' என்ற கொடிய விஷ மருந்தை செடியின் வேர் அருகில் வைத்தால் மட்டுமே வேர்புழு மற்றும் தண்டு துளைப்பான் புழுக்கள் தாக்குதல் இல்லாமல் இருக்கிறது. மருந்து வைக்காமல் விட்டால் வேகமாக காற்று வீசினால் கூட செடிகள் ஒடிந்து விடுகின்றன. பருத்தி சாகுபடியில் உள்ள பெரிய பிரச்னை பச்சைப் புழு தாக்குதல். இப்புழுக்கள் காய்களின் உள்ளே புகுந்து கொண்டு, காய்களை சாப்பிடும் இயல்புடையது. எத்தகைய வீரிய மருந்தை அடித்தாலும் சாகாவரம் பெற்றவைகளாக இருக்கின்றன. வாரம் ஒரு முறை மருந்து அடித்தால் மட்டுமே ஓரளவு மகசூல் கிடைக் கிறது. பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு ஏற்படும் செலவு பல மடங்கு எகிறி விட்டதால், ஏழை விவசாயிகளால் மருந்துக்கு அதிக அளவில் செலவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

புழுதிக் குருவி என்று அழைக்கப்படும் சில்வர் பேட்ஸ், மைனா, கொக்கு இன்னும் பல்வேறு பறவை இனங்கள் இது போன்ற புழுக்களை விரும்பிச் சாப்பிடும் இயல்புடையது. இதன் காரணமாக, இயற்கையாகவே புழுக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டதால், பறவைகளின் எண் ணிக்கை வெகுவாக குறைந்தது. இதனால், இயற்கையான தொடர் உணவுச்சங்கிலி முறையில் மாறுதல் ஏற்பட்டது. இதுவே புழுக்களின் அபரிமிதமான இனப்பெருக்கத் திற்கு காரணமாயிற்று. இது, பருத்தி விளைச்சலில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. பருத்தி விவசாயிகளுக்கு தொடர்ந்து ஏற்பட்ட நஷ்டத்தால், பருத்தி சாகுபடி செய்வதை பெருமளவு குறைத்துக் கொண்டனர். தற்போது, வெகு அரிதாக சில இடங்களில் மட்டுமே பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இதே நிலை நீடித்தால், எதிர்காலத்தில் பருத்தி சாகுபடி அறவே இல்லாமல் போகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***இந்த ஆண்டு ரூ.2,500 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும் அமைச்சர் கோ.சி.மணி அறிவிப்பு***

*சென்னை, ஏப்.17–*
*இந்த ஆண்டு ரூ.2,500 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும் என்று அமைச்சர் கோ.சி.மணி தெரிவித்தார்.*
*சட்டசபையில் நேற்று கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்து அமைச்சர் கோ.சி.மணி பேசியதாவது:–*
டெபாசிட் அதிகரிப்பு
*2005–06ம் ஆண்டில் ரூ.1,132 கோடி அளவிற்கு வழங்கப்பட்டிருந்த பயிர்க்கடன் 2009–10ம் ஆண்டில் 2,169 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை பயிர்க்கடன் பெறாத 2.53 லட்சம் பேருக்கு ரூ.607 கோடி வழங்கப்பட்டுள்ளது.*
*இந்த அரசு பொறுப்பேற்றபோது லாபம் ஈட்டிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் 475 மட்டுமே. ஆனால் இன்று 3,519 சங்கங்கள் லாபம் ஈட்டும் நிலையை எட்டியுள்ளன. கூட்டுறவு அமைப்புகளிலே ரூ.14,963 கோடியாக இருந்த வைப்புத் தொகை இன்று ரூ.23,793 கோடியாக உயர்ந்துள்ளது.*
*லாபத்தில் இயங்குகிறது*
*கடந்த காலத்தில் 199 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை கலைத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. கழக அரசு பொறுப்பேற்றவுடன் கலைத்தல் அறிவிப்பை ரத்து செய்து, புத்துயிரூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

அதன் பலனாக கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் இச்சங்கங்கள் மூலமாக ரூ.278.25 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தொடர்ந்து 2 ஆண்டுகளாக லாபத்தில் செயல்பட்டு வருகிறது.கூட்டுறவு சங்கங்களில் 4,119 பேர்களுக்கு பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள காலிப் பணியிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கொப்பரை கொள்முதல் செய்யப்படவில்லை என்று பொள்ளாச்சி ஜெயராமன் கூறினார். 2, 3 நாட்கள் கிடங்குகளில் இடமில்லாததால் தான் கொள்முதல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் இப்போது தொடர்ந்து கொள்முதல் நடந்து வருகிறது. 6 மாவட்டங்களில் 14 இடங்களில் 27 ஆயிரம் டன் கொப்பரை கொள்முதல் நடந்துள்ளது. இதன் மதிப்பு ரூ.120.35 கோடி. நேற்று கூட பொள்ளாச்சியில் 41 டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.நகை அடமானம் வைத்தால் தான் கூட்டுறவு வங்கிகள் பயிர்க்கடன் வழங்குவதாக கூறினார்கள். பயிர்க்கடனுக்கு நகை அடமானம் கேட்கும் வங்கிகள் பற்றி குறிப்பிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

ரூ.2,500 கோடி பயிர்க்கடன்

2010ம் ஆண்டில் ரூ.2,500 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும். இந்த ஆண்டு மேலும் 10 ஆயிரம் விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ரூ.10 கோடி சுழல்நிதி வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகள் பொருளாதார முன்னேற்றத்திற்காக ரூ.7 கோடி கடன் வழங்கப்படும். முதலீட்டுக் கடன்கள் ரூ.300 கோடி வழங்கப்படும். சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசன வசதிகள் அமைக்க ரூ.100 கோடியும், சிறு வணிக கடனாக ரூ.100 கோடியும், தானிய ஈட்டுக் கடன் ரூ.150 கோடியும் வழங்கப்படும். 100 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண்மை சேவை மையங்களும், மின்னணு பொது சேவை மையங்களும் தொடங்கப்படும்.

நவீன சுயசேவை பிரிவு

திருவள்ளூர், தர்மபுரி, கடலூர், கரூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கூட்டுறவு அலுவலக வளாகங்கள் அமைக்க ரூ.5 கோடி ஒதுக்கப்படும். தேங்காய் அதிகம் உற்பத்தியாகும் பொள்ளாச்சியில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.50 லட்சம் செலவில் தேங்காயை கொப்பரையாக மாற்றும் அலகு அமைக்கப்படும்.சிவகங்கை, நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு ரூ.1.50 கோடியில் சொந்த கட்டிடம் கட்டப்படும். கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 50 மருந்தகங்கள் கூடுதலாக தொடங்கப்படும். கோயம்புத்தூர், வேலூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் தலைமையிடங்களிலும் மற்றும் சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் ராஜா அண்ணாமலைபுரம், தேனாம்பேட்டை, ராயப்பேட்டை ஆகிய 5 இடங்களில் ரூ.1 கோடி செலவில் சுயசேவைப் பிரிவுகள் நவீனமயமாக்கப்படும்.

தேங்காய் கொள்முதல்

பொள்ளாச்சி ஜெயராமன் (அ.தி.மு.க.):– கொப்பரையும் கொள்முதல் செய்ய வேண்டும், மத்திய அரசின் ஆணைப்படி தேங்காயும் கொள்முதல் செய்ய வேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள்.

கோ.சி.மணி:– தேங்காய் கொள்முதல் பற்றி பரிசீலிப்போம். சரியாக இருந்தால் நிச்சயம் கொள்முதல் செய்வோம்.இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

**அண்மையில் நிறைவடைந்த ரபி பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 11.70 கோடி டன்னாக இருக்கும்**



பிரபா ஜெகன்னாதன்

புதுடெல்லி

ரபி வேளாண் பருவம், சென்ற மார்ச் மாதத்துடன் நிறைவடைந்தது. இப்பருவத்தில் உள்நாட்டில் நெல், கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களின் உற்பத்தி 11.70 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் சென்ற ஆண்டு கரீஃப் பருவ மகசூலில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை ஓரளவிற்கு ஈடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கரீப்–ரபி

நம் நாட்டில் கரீஃப் மற்றும் ரபி ஆகிய இரண்டு பருவங்களில் வேளாண் சாகுபடி மேற்கொள்ளப்படுகின்றது. கரீஃப் பருவம் ஜூன் மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் நிறைவடைகிறது. ரபி பருவம் உத்தேசமாக அக்டோபர் மாதம் தொடங்கி மார்ச் மாதத்தில் நிறைவடைகிறது.

கரீஃப் பருவ வேளாண் நடவடிக்கைகள் தென்மேற்கு பருவமழையைச் சார்ந்தும், ரபி பருவ சாகுபடி பணிகள் வடகிழக்கு பருவமழையைச் சார்ந்தும் நடைபெறுகின்றன. கரீஃப் பருவ பயிர்கள் கோடை கால பயிர்கள் என்றும் ரபி பருவ பயிர்கள் குளிர்கால பயிர்கள் என்றும் அழைக்கப்படுவதுண்டு.

கடந்த 2008–09–ஆம் ஆண்டு வேளாண் பருவங்களில், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி 23.45 கோடி டன்னாக இருந்தது. இதில் அரிசி மற்றும் கோதுமை ஆகிய முக்கிய தானியங்கள் முறையே 8.03 கோடி டன் மற்றும் 8.07 கோடி டன்னாக இருந்தன. இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி, சென்ற 2009–10–ஆம் ஆண்டு வேளாண் பருவங்களில் உணவு தானியங்களின் ஒட்டுமொத்த மகசூல் 21.68 கோடி டன்னாக சரிவடையும் என தெரிகிறது. இது, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 7.55 சதவீதம் குறைவாகும். எனினும் அரிசி உற்பத்தி 8.76 கோடி டன்னாகவும், கோதுமை விளைச்சல், குறைந்தபட்ச சரிவுடன், 8.03 கோடி டன்னாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அரிசி–கோதுமை

நம் நாட்டில் அரிசி மற்றும் கோதுமையே பிரதான உணவு தானியங்களாக உள்ளதால், இவற்றின் உற்பத்தியில் சரிவு ஏற்பட்டு விடாத வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றன. எனினும் சென்ற ஆண்டில், கடந்த 37 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நாட்டின் பல பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டதால் இடர்பாடு ஏற்பட்டது.

தென் மேற்கு பருவமழை ஏமாற்றியதால் உணவு தானிய உற்பத்தி பாதிக்கப்பட்டது. சென்ற ஆண்டு கரீஃப் பருவத்தில், முந்தைய ஆண்டின் இதே பருவத்துடன் ஒப்பிடும்போது 1.12 கோடி டன் உணவு தானியங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால், மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி, அண்மையில் நிறைவடைந்த ரபி பருவத்தில் தானியங்கள் விளைச்சல் அமோகமாக இருக்கும் என்று தெரிகிறது. இந்நிலையில் நாட்டின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தியில், சென்ற 2009–10–ஆம் ஆண்டில் குறைந்த அளவிற்கே சரிவு ஏற்படும் என்ற தகவல் அரசுத் துறை வட்டாரங்களுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

மூன்றாவது மதிப்பீடு

மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடு என்பது பொதுவாக மிகவும் துல்லியமானதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. வரும் மே அல்லது ஜூன் மாதத்தில் உணவு உற்பத்தி குறித்த இறுதி புள்ளிவிவரங்கள் வெளிவர உள்ளன. அது மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டினை பிரதிபலிப்பதாக அமையும் என்றும் கூறப்படுகிறது.

உள்நாட்டில் உணவு உற்பத்தி கடுமையாக குறையும்போது, தானியங்கள் வரத்து குறைந்து விலைவாசி உயர்ந்து விடுகிறது. இதனால் பணவீக்கம் அதிகரிக்கிறது. சென்ற ஆண்டு கரீஃப் பருவத்தில் உற்பத்தி கடுமையாக சரிவடைந்ததால், சில மாதங்களுக்கு முன் நாட்டின் உணவுப் பணவீக்கம் 20 சதவீதத்தை தாண்டியிருந்தது. தற்போது 17.70 சதவீதமாக சற்று கட்டுக்குள் வந்துள்ளது. தற்போது உணவு தானியங்கள் அளிப்பில் இடையூறு ஏற்பட வாய்ப்பில்லை என்ற நிலை உருவாகியுள்ளதால், உணவுப் பணவீக்கம் மேலும் குறையும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக தோன்றியுள்ளது.

வட மாநிலங்களில்...

வட மாநிலங்களில் கோதுமையே பிரதான உணவாக உள்ளது. பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் கோதுமை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. தற்போதைய பருவத்தில் கோதுமை உற்பத்தி 8 முதல் 8.10 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை விளையும் முக்கிய பகுதிகளில் பகலில் உஷ்ணம் அதிகமாக இருந்தாலும், இரவில் வெப்ப நிலை குறைவாக உள்ளது. வறண்ட பருவநிலையால் பூச்சித் தாக்குதல் அபாயமும் குறைவாக உள்ளது. இவை கோதுமை உற்பத்தி உயர்வதற்கான வாய்ப்பினை உருவாக்கியுள்ளன என அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சர்வதேச அளவில், நடப்பு பருவத்தில் அராபிகா காபி உற்பத்தி 8.5 சதவீதம் சரிவடையும்**

அருண் ஐயர்

பெங்களூர்

நடப்பு காபி பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) சர்வதேச அளவில் அராபிகா காபி உற்பத்தி 8.5 சதவீதம் சரிவடையும் என லண்டனைச் சேர்ந்த சர்வதேச காபி அமைப்பு தெரிவித்துள்ளது.

அராபிகா–ரோபஸ்டா

சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் உலக அளவில், அராபிகா உற்பத்தி 7.86 கோடி மூட்டைகளாக இருந்தது. இது, நடப்பு பருவத்தில் 7.19 கோடி மூட்டைகளாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் அராபிகா மற்றும் ரோபஸ்டா எனும் இரண்டு வகை காபி பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகிறது. நம்

நாட்டின் காபி தோட்டங்களில் இந்த இரண்டு வகைகளுமே உற்பத்தியாகின்றன. உலக அளவில் அராபிகா உற்பத்தி சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், இந்தியாவில் இதன் விலை உயர்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

உள்நாட்டில் தற்போது 50 கிலோ கொண்ட அராபிகா காபி மூட்டை ஒன்று ரூ.6,375 முதல் ரூ.6,525 என்ற அளவில் இருந்து வருகிறது. இதன் விலை மேலும் ரூ.100 அல்லது ரூ.150 உயரக் கூடும் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. சென்ற 2009–ஆம் காலண்டர் ஆண்டில், 50 கிலோ அராபிகா விலை ரூ.7,000–7,200 என்ற அளவை எட்டியது. எனினும், நடப்பு ஆண்டில் இந்த அளவிற்கு விலை அதிகரிக்காது என்ற ஆறுதலான தகவலும் வெளியாகி உள்ளது.

ஒட்டுமொத்த அளவில்...

உலகம் முழுவதுமாக காபி உற்பத்தி ஒட்டுமொத்த அளவிலும் சரிவடையும் நிலை உள்ளதாக சர்வதேச காபி அமைப்பு மதிப்பிட்டுள்ளது. 2008–09–ஆம் ஆண்டு பருவத்தை விட நடப்பு பருவத்தில் உற்பத்தி 4.8 சதவீதம் குறைந்து 12.20 கோடி மூட்டைகளாக சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு பருவத்தில், பிரேசில் நாட்டில் காபி உற்பத்தி 4.59–4.87 கோடி மூட்டைகளாக இருக்கும் என்றும் கொலம்பியாவின் உற்பத்தி ஒரு கோடி மூட்டைகளாக இருக்கும் என்றும் முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

கோத்தகிரியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதை தடுக்க

## வறண்டு கிடக்கும் ஈளாடா தடுப்பணை தூர்வாரப்படுமா?

கோத்தகிரி, ஏப்.17– சுட்டெரிக்கும் வெயிலால் ஈளாடா தடுப்பணையில் தண்ணீர் வற்றி விட்டது. எனவே அணையை தூர்வாரி ஆழப்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

### ஈளாடா தடுப்பணை

கோத்தகிரியில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ஈளாடா தடுப்பணை. கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் ஈளாடா தடுப்பணை கட்டப்பட்டது.

இந்த தடுப்பணைக்கு கதவுத்தொரை மலைப்பகுதியில் இருந்து ஊற்று உருவாகி சிறிய ஓடையாக மாறி தண்ணீர் தடுப்பணையில் சேமிக்கப் படுகிறது.

அவ்வாறு சேமிக்கப்படும் தண்ணீர் தடுப்பணைக்கு வெளிப்பகுதியில் உள்ள கிணற்றில் சேமிக்கப்பட்டு அங்கிருந்து மோட்டார் மூலம் ஈளாடா வனப்பகுதியில் உள்ள தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் சேமிக்கப்படுகிறது. அங்கிருந்து புதூரில் உள்ள மேல்நிலை தொட்டியில் சேமிக்கப்படும் தண்ணீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. பிறகு ராம்சந்த் பகுதியில் உள்ள மேல்நிலை தொட்டியில் சேமிக்கப்பட்டு பொது மக்களுக்கு வாரம் இருமுறை குடிதண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது.

### மழை அளவு குறைவு

கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மக்கள் தொகைக்கு ஈளாடா தடுப்பணையில் சேமிக்கப்படும் தண்ணீர் போதுமானதாக இருந்தது. அப்போது ஆண்டின் சராசரி மழை அளவும் அதிகளவு இருந்தது. இப்போது நகர பகுதியில் மக்கள் தொகை அதிகரித்து உள்ளது. மழை அளவும் குறைந்து விட்டது.

மேலும் கோத்தகிரி மிஷன் காம்பவுண்டு குடிநீர் ஆதாரம், போலீஸ் குடியிருப்பு அருகில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் வற்றி விட்டது. எஞ்சியுள்ள ஈளாடா தடுப்பணையில் இருந்தே ஆண்டு முழுவதும் கோத்தகிரி நகர பகுதிக்கு குடிதண்ணீர் வினியோகம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. ஈளாடா தடுப்பணைக்கு தண்ணீர் வரும் சிறிய ஓடையின் 2 பகுதியிலும் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. காய்கறிகள் தோட்டத்தில் இருந்து மண் அதிகளவு வெளியேறி ஓடை வழியாக தடுப் பணையில் சேருகிறது. இதனால் தடுப்பணையின் ஆழம் குறைந்து மண் திட்டாக மாறி விட்டது.

### மண்மூடி

தற்போது ஈளாடா தடுப்பணையில் உள்ள மதகு பகுதி முழுவதும் மண்மூடி உள்ளது. சுமார் 20 அடிக்கும் அதிகமான ஆழம் கொண்ட தடுப்பணையில் தற்போது சுமார் 5 அடி உயரம் வரை மட்டுமே தண்ணீரை தேக்கி வைக்கும் நிலை உள்ளது.

கோடை காலத்தில் ஊற்று நீர் வரும் ஓடையின் குறுக்கே விவசாயிகள் தடுப்புகளை ஏற்படுத்தியும், குழிகளை வெட்டியும் தண்ணீரை தேக்கி பாசனத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் தடுப்பணைக்கு கொஞ்சம் கூட தண்ணீர் வருவதில்லை. தடுப்பணை முற்றிலும் வறண்டு ஆடு, மாடுகள் மேயும் மேய்ச்சல் நிலமாக மாறி விட்டது. இதனால் நகரில் குடிதண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்து உள்ளது. கோடை முடிந்து பருவமழை தொடங்குவதற்கு முன்பு ஈளாடா தடுப்பணையில் தூர்வார பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 10 அடி ஆழப்படுத்த வேண்டும்

கடந்த சில ஆண்டுக்கு முன்பு பொக்லைன் எந்திரம் மூலம் தூர்வாரப்பட்டது. கரை பகுதியில் சில அடி தூரம் வரை மண் எடுத்து கரை மீது போடப்பட்டது. அதன் பிறகு பெய்த பலத்த மழையால் மண் அனைத்தும் மீண்டும் அணைக்குள் வந்து விட்டது. எனவே அணையின் மதகுபகுதிகள், மைய பகுதிகளில் சுமார் 10 அடி வரையில் ஆழப்படுத்த வேண்டும். இதனால் நீரின் கொள்ளளவு அதிகரிக்கும். கோடை காலத்தில் வாரத்திற்கு ஒரு முறையாவது பொது மக்களுக்கு குடிதண்ணீரை தடையின்றி வினியோகம் செய்ய முடியும்.

கோத்தகிரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இயற்கை ஊற்று பகுதிகள் 14 இருந்தது. தற்போது அனைத்தும் காணாமல்போய் குடியிருப்புகளாக மாறி விட்டது.

### கோரிக்கை

எஞ்சியுள்ள சில நீராதாரங்களும் அதிக அளவு மாசுபடுத்தப்பட்டு வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகையின் அளவிற்கேற்ப தற்போதுள்ள குடிதண்ணீர் ஆதாரங்களை ஆழப்படுத்துவதுடன், மாசடைவதை தடுத்திடவும் பேரூராட்சி நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியம்.

தவறும்பட்சம் எதிர்காலத்தில் தண்ணீருக்காக மிகவும் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே பேரூராட்சி அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொது மக்களின் ஒட்டு மொத்த கோரிக்கையாக உள்ளது.



ஈளாடா தடுப்பணைக்கான நீர்பிடிப்பு பகுதிகள் மேய்ச்சல் நிலமாக மாறி விட்டன.



கோத்தகிரி நகருக்கு குடிநீர் வழங்கும் ஈளாடா தடுப்பணையில் தற்போது தண்ணீர் மிகவும் குறைவாக உள்ள காட்சி.



ஈளாடா தடுப்பணை தூர் வாரப்படாததால் சேறும்– சகதியுமாக உள்ள இடம் காய்ந்து, பாளம் பாளமாக வெடித்து காட்சி அளிக்கிறது.